**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.**
**STC. No.142/2022 P.W.1**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | சுப்பிரமணியன் | த–பெ | சோலை |
| ஊர்: | : | ஊனையூர் | சமயம்: | |
| வயது: | : | 60/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | கூலிவேலை | மாவட்டம் | புதுக்கோட்டை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 02.07.2025**

**எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

---------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

நான் தற்சமயம் ஊனையூரில் வசித்து கூலிவேலை செய்து வருகிறேன். 16.04.2021 அன்று எனது மகன் கார்த்திகேயன், எனது மருமகள் தமிழ்செல்வி ஆகிய இருவரும் எனது மகனுக்கு சொந்தமான இருசக்கர வாகனம் வண்டி எண். 9854 ல் காலை 10.00 மணிக்கு ஊனையூரில் இருந்து கிளம்பி காரைக்குடியில் உள்ள மகப்பேறு மருத்துவமனைக்கு சென்றார்கள். பின்னர் 10.15 மணியளவில் என்னுடைய செல்போனுக்கு ஒரு அழைப்பு வந்தது அதில் பேசிய நபர் எனது மகனுக்கு சாலை விபத்து பழைய பைபாஸ் சாலை காளியம்மன் கோவில் அருகில் நடந்ததாகவும், பிளசர் வாகனம் ஒன்று அவர்கள் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியதாக சொன்னார்கள். இந்த சம்பவத்தை கேள்விப்பட்ட நான் எனது மனைவியுடன் சம்பவயிடம் சென்று பார்த்த போது எனது மகன் சம்பவயிடத்தில் இரத்த வெள்ளத்தில் கிடந்தார். மேலும் எனது மகனுக்கு மேல் பல் 3 எண்ணிக்கைகள் உடைந்து இருந்தது. இடது கை மற்றும் வலது கை மணிக்கட்டு, வலது முழங்கால் கீழ் பகுதியில் இரத்த காயங்கள் ஏற்பட்டிருந்தது. எனது மருமகளுக்கு இடுப்பு பகுதியில் காயம் ஏற்பட்டிருந்தது.

பின்னர் 2 ஆம்புலன்ஸில் காயம்பட்ட எனது மகன் மற்றும் மருமகளை புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் அரசு மருத்துமனையில் சிகிச்சைக்கு சேர்த்தோம் பின்னர் மேல் சிகிச்சைக்காக அங்கிருந்த மருத்துவர்கள் பரிந்துரையின் அடிப்படையில் புதுக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சேர்த்தோம். பின்னர் ஒரு மாத காலம் எனது மகன் அங்கு சிகிச்சையில் இருந்தார். எனது மருமகள் 2 முதல் 3 வாரங்கள் அங்கு சிகிச்சையில் இருந்தார். இதனிடையே போலீசார் மருத்துமனையில் இருந்த போது விபத்து சம்மந்தமாக விசாரணை செய்தார்கள் நான் அவர்களிடம் புகார் அளித்தேன். அந்த புகார் **அ.சா.ஆ.1**. விபத்தை ஏற்படுத்தியவர் சம்பவ சமயத்தில் விபத்தை ஏற்படுத்தி விட்டு அங்கிருந்து சென்று விட்டார். ஆகையால் அவரை பார்க்கமுடியவில்லை இன்றளவும் அவர் எங்களிடம் தொடர்பில் இல்லை.

__குறுக்கு விசாரணை__

நான் முதல் விசாரணையில் சொன்ன விவரங்களை தான் போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. விபத்தை ஏற்படுத்தியது யார் என்றும் அவர் சம்மந்தமான விவரங்கள் எதுவும் தெரியாது என்று சொன்னால் சரிதான். நான் கொடுத்தாக சொல்லப்படும் புகாரை யார் எழுதியது என்றால் அங்கு இருந்த போலீசார் எழுதினார்கள். அந்த போலீசார் விவரம் தெரியுமா என்றால் தெரியாது. நான் சொல்ல சொல்ல புகாரை போலீசார் எழுதினார்களா என்றால் நான் விவரம் சொல்ல தான் அவர் எழுதினார். புகாரை நான் வாக்குமூலமாக கொடுத்தேன் என்று சொன்னால் சரிதான். நான் சொன்னபடி தான் புகாரில் எழுதியிருந்தார்களா என்றால் அது எனக்கு தெரியாது. எனக்கு படிக்க தெரியாது. மேலும் அப்போது நான் பதட்டத்தில் இருந்ததால் எனக்கு தெரியாது. எனது மகனும், மருமகளும் இரத்த வெள்ளத்தில் கிடந்ததாக நான் போலீசாரிடம் சொன்னேனா என்றால் சொன்னேன். அதை அவர்கள் புகாரில் குறிப்பிட்டார்களா என்றால் அது எனக்கு தெரியாது. எனக்கு படிக்க தெரியாது. என்னுடைய மகன் தான் இந்த விபத்துக்கு காரணம் என்று சொன்னால் சரியல்ல. இழப்பீடு பெறுவதற்காக சம்பவத்தை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிக்கும் சம்மந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல. எனக்கு இந்த வழக்கு பற்றி எதுவும் தெரியாது என்று சொன்னால் சரியல்ல. புகாரில் உள்ள கையொப்பம் மட்டுமே என்றுடையது நான் சொன்னது எதுவும் சரியல்ல என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2025.07.02 10:26:46 +0530

குற்றவியல் நடுவர், காரைக்குடி